BRAMPTON Service and Information Update

# நகராட்சி மேம்பாட்டுக் கழகம் ஒன்று பற்றி கருத்துக்கள் வழங்க நகர வாசிகளை ப்ராம்ப்ட்டன் நகரம் அழைப்பு விடுக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 9, 2020) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது நகராட்சி மேம்பாட்டுக் கழகம் (MDC) ஒன்றை உருவாக்குவது குறித்து ஆலோசித்து வருகிறது. www.bramptonmdc.ca என்ற வலைத்தளத்தின் மூலம் இந்த முன்மொழிவு குறித்து தங்கள் கருத்துக்களை வழங்க குடியிருப்புவாசிகள் அழைக்கப்படுகிறார்கள். நவம்பர் 25, 2020 வரை இதற்கான கருத்துக்கள் வரவேற்கப்படும்.

ப்ராம்ப்ட்டன் நகரத்தில் அமைய உள்ள இந்த MDC ஆனது நிலபுலன் வகைகளுக்கான கழகமாக (கார்ப்பரேஷனாக) செயல்படும்; திட்டப்பணிகளுக்கென வரையறுக்கப்பட்ட யுக்திரீதியான ஆணைபெற்று, யுக்தி ரீதியாக நிலம் மற்றும் சொத்துக்களை கையகப்படுத்துதல், கூட்டு சேர்த்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும். ப்ராம்ப்ட்டன் MDC என்பது ப்ராம்ப்ட்டன் நகரத்தின் முழு உடைமை கொள்ளப்பட்ட நிறுவனமாக இருக்கும், மற்றும் இந்த MDC மூலம் கிடைக்கும் அனைத்து வருவாயும் ஈவுத்தொகை வடிவில் நகர நிர்வாகத்திற்கே மீண்டும் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒரு MDC ஐ உருவாக்குவதற்கான பகுத்தறியும் வழி பின்வருமாறு:

- நகராட்சியின் நோக்கங்களுக்கான பரந்த ஒரு தொகுப்பை அடைவதற்கான வாய்ப்புகள் (குறிப்பிட்ட பொருளாதாரத் துறைகளைத் தூண்டிவிடுவதற்கென வேலை வாய்ப்பு வழங்கவல்ல முக்கிய முதலாளிகளுக்கு நிலத்தை வழங்குவது போன்றவை);
- சட்டரீதியான ஒப்புதல் வழங்கும் பொறுப்புகளைப் பிரித்தெடுத்தல்;
- ஒப்பந்தங்களை செயலாக்கம் செய்யும் திறன்;
- செலவைக் குறைக்கின்றதும் மற்றும் லாபம் ஈட்டுகின்றதுமான தன்மை; மற்றும்
- நிபுணத்துவத்தை ஈர்க்கும் திறனுக்கு ஆதரவளிக்கிறது.

ப்ராம்ப்ட்டன் எம்.டி.சி ஒன்றை உருவாக்கம் செய்வது என்பது, ப்ராம்ப்ட்டன் தொலைநோக்குப்பார்வை 2040 உடன் ஒத்துப்போகிறது; தொலைநோக்குப் பார்வையின் கீழ் அடையாளம் காணப்பட்ட கீழ்காணும் ஆறு திட்டப்பணி பகுதிகளுக்குள் நிலபுலன் வகைகள் மற்றும் சொத்துக்களை ஆளுமை செய்து நிர்வகிப்பதன் மூலம் இது அடையப்படுகிறது, அவையாவன: அப்டவுன் ப்ராம்ப்ட்டன்; டவுண்டவுன் பிராம்ப்டன்; ப்ரமீலியா; க்வீன் ஸ்ட்ரீட் காரிடார்; நகர மையங்கள் ஐந்து; மற்றும் தொழில்துறை காரிடார்.

நகராட்சி மேம்பாட்டுக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு முன், பொதுமக்களுடன் கலந்தாலோசிப்பது உட்பட, குறிப்பிட்ட சட்டத் தேவைகள் பின்பற்றப்படுவது அவசியம். முழுமையான, வெளிப்படையான மற்றும் ஒத்துழைப்பு கொடுக்கும் வகையிலான செயல்முறையில் பொதுமக்களை ஈடுபடுத்த நகரம் உறுதிபூண்டுள்ளது.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca